211—

சுற்றுலாத் தலம்

*1095—**திரு. ப. சம்பத்குமார்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில் ஒரு புகழ் பெற்ற திருக்கோயிலாகும். ஆணும் பெண்ணும் சரிசமம் என்று சொல்லக்கூடிய வகையிலே அங்கே தெய்வ வடிவம் திருவடிவமாக அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் அதிகமாக அங்கே வருவது தொடர்பாக கருத்துரு பெறப்பட்டதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணைப்படி அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்பதற்காக 2012-2013 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பிலேயே நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்பது 12-வது அறிவிப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்து சமய அறநிலையங்கள் துறை மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு திட்ட மதிப்பீடும் பெறப்பட்டு, இந்த ஆண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவில் அந்தப் பணிகளைச் செய்யும் என்பதையும் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார் அவர்கள்.*

2012 மே 4]

திரு. ப. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிந்தியாவிலிருந்து பக்தர்கள் ராகு, கேது பரிகாரம் செய்யவும், தரிசனம் செய்யவும், அதிக அளவில் அங்கு வருகின்றனர். அதுமட்டுமல்ல, அத்திருக்கோயிலில் திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. கொங்கு நாட்டில் உள்ள 7 சிவன் கோயில்களில் இது முதன்மைக் கோயிலாக உள்ளது. ஆகையால், அத்திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அர்த்தநாரீஸ்வரர் கோயில் உள்ள திருச்செங்கோடு ஒரு ஆன்மிக சுற்றுலா தலம் என்று கருதித்தான் இந்த நிதி ஆண்டு 2012-2013-லேயே, சுற்றுலாத் துறையின் அறிவிப்பு 12-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதோடு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு அந்தப் பணிகள் செய்யப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

212—

தொழிற்பயிற்சி நிலையம்

***3738—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்டதாகும். விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை மற்றும் சங்கராபுரம்